NETHAJI LIBRARY AND SPORTS CLUB, THOOTHOOR-629176
INDEPENDENCE DAY 2019

# பிளாஸ்டிக் விழிப்புணர்வு உறுதிமொழி

அன்புள்ள தோழர்களே, தோழிகளே

*(நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர் பெயரை கூறுங்கள்)*

**_____ எனும் நான்**, தூத்தூர் நேதாஜி படிப்பகத்தோடு இணைந்து, இந்தியாவின் 73 ஆவது சுதந்திர தினத்தை, கொண்டாடும் இந்த நன்னாளில், கீழ்கண்ட உறுதி மொழிகளை எடுக்கிறேன்.

1. பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை, படிப்படியாக குறைப்பேன், முடிந்தவரை தவிர்ப்பேன்.
2. கடைகளுக்கு செல்லும்போது, கட்டாயமாக, துணிப்பை எடுத்து செல்வேன்.
3. ஒற்றை உபயோக பிளாஸ்டிக்குக்கு, எந்த இடத்திலும், எந்த சூழ்நிலையிலும், மறுப்பு தெரிவிப்பேன்.
4. மறுஉபயோக டம்ளர்கள், மறுஉபயோக தட்டுகள், மற்றும் மறுஉபயோக பாட்டில்கள் மட்டுமே, வீட்டிலும், பிற இடங்களிலும், பயன்படுத்துவேன்.
5. பிளாஸ்டிக் கழிவுகளை, வெளியிடங்களில் வீசியெறியாமல், சரியான முறையில் கையாண்டு, அது மறுசுழற்சி ஆவதை, உறுதி செய்வேன்.
6. பிளாஸ்டிக் அதிகம் பயன்படுத்துவதால், ஏற்படும் பேராபத்துகளை, பிறருக்கு எடுத்து சொல்லி, அவர்களையும், விழிப்புணர்வு அடைய செய்வேன்.
7. வருங்கால தலைமுறையினர், பசுமையான மற்றும் ஆரோக்கியமான பூமியில் வாழ, எனது பொறுப்புகளை சரியாக கடைபிடிப்பேன்.

மேற்சொன்ன உறுதிமொழிகளை என்னுடைய வாழ்க்கையில் இந்த நிமிடம் முதல் கடைபிடிப்பேன். நன்றி.

THOOTHOOR SINCE 2001 .com